தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 12, விய – திருவள்ளுவர் ஆண்டு 2038

2007 மார்ச் 26, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி".

உலகில் உள்ள உயிர்கள் வாழ்வதற்கு மழை தேவைப்படுவதுபோல ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்று (26–3–2007) முதல் 30–3–2007 வரையிலான நாட்களுக்கு வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 26–3–2007 முதல் 30–3–2007 வரையிலான நாட்களுக்குத் தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

[2007 மார்ச் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று *(26–3–2007)* முதல் *30–3–2007* வரையிலான நாட்களுக்கு வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

2. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி *9(1)*-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் ஐந்தாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன்:

1. திரு. ப. ரங்கநாதன்
2. திரு. துரை சந்திரசேகரன்
3. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
4. திரு. தி. வேல்முருகன்
5. செல்வி கே. பாலபாரதி
6. திரு. வை. சிவபுண்ணியம்

3. வரவு–செலவுத் திட்டம், 2007–2008, பொது விவாதம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2007–2008* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. சு.ப. வேலுமணி.

***திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை குனியமுத்தூர் நகரத் தலைவராகவும், கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணிச் செயலாளராகவும், பேரூர் ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 2001–ல் குனியமுத்தூர் நகர மன்றத் தலைவராகவும் ஆக்கி, நடந்து முடிந்த